**யட்டியாந்தோட்டை பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 28 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியன்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜுன் 28 ஆந் திகதியன்று சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களினாலான தாக்கங்களைத் தவிர, நிதிசார் கூற்றுக்களில் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான யட்டியாந்தோட்டை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடு மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு ஏற்ப உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டிற்கான வழங்கல் மற்றும் உபகரணச் செலவினமாகிய ரூபா 3,933,034 கணிப்பிடப்படுகையில் களஞ்சியக் கட்டுப்பாட்டுக் கணக்கு பயன்படுத்தப்படாது செலவினத் தலைப்பிலிருந்து நேரடியாகச் செலவிடப்பட்ட தொகை கணக்கிலிடப்பட்டமையால் அச் செலவினம் பிழையின்றிக் கணிப்பிடப்பட்டுக் காட்டப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நீதிமன்றத் தண்டப் பணத்தின் பொருட்டான பதவியணியினர் ஊக்குவிப்புப் படி ரூபா 106,859 ஆகும். எனினும், 2011 2012 ஆம் ஆண்டுகளது கொடுப்பனவாகிய ரூபா 319,296 இதில் கணக்கிலிடப்பட்டதால் ஆண்டிற்கான செலவினம் ரூபா 212,437 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) இரு டிரொலிகளை மயானத்திற்குக் கொள்வனவு செய்தமைக்கான மூலதனச் செலவினம் ரூபா 72,000 ஆகும். இது வழங்கல் மற்றும் உபகரணச் செலவினமாகக் கணக்கிலிடப்பட்டதால் மூலதனச் செலவினமும் மீண்டுவருஞ் செலவினமும் முறையே ரூபா 72,000 குறைவாகவும் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டு முடிவிலான எஞ்சிய கொம்போஸ்ட் உரக் கையிருப்புப் பெறுமதி கணிப்பிடப்பட்டுக் கணக்கிலிடப்படாமையால் நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதி குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்கான கொம்போஸ்ட் உர விற்பனை வருவாய் ரூபா 40,550 ஆகும். இது ரூபா 4,055 ஆகக் கணக்கிலிடப்பட்டமையால் ஆண்டிற்கான வருவாய் ரூபா 36.495 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) கித்துல்கல, அமனாவல, யட்டியாந்தோட்டை நூலகங்களுக்கு நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற புத்தகங்களது பெறுமதி ரூபா 46,469 ஆகும். இது ரூபா 41,369 ஆகக் கணக்கிலிடப்பட்டமையால் நிலையான சொத்துக் கணக்கும் மூலதனப்

பயன்பாட்டிற்கான வருவாய் பங்களிப்புக் கணக்கு மீதியும் ரூபா 5,100 குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(எ) இயந்திர சாதனங்களைக் கொள்வனவு செய்வதற்கான ரூபா 329,796 செலவினத்தில் நுகர் பொருட் செலவினமாகிய ரூபா 60,505 உள்ளடங்கியமையால் நிலையான சொத்துக்களது பெறுமதி மற்றும் மூலதனப் பயன்பாட்டிற்கான வருவாய்ப் பங்களிப்புக் கணக்கு என்பன அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஏ) செலவினப் பேரேட்டின்படியான இரண்டாவது நிகழ்ச்சித்திட்டத்தின் வழங்கல் மற்றும் உபகரணச் செலவினமான ரூபா 1,457,672 தவறுதலாக ரூபா 40,343 ஆக வழங்கல் மற்றும் உபகரணக் கணக்கில் பதிவு செய்யப்பட்டதால் செலவினம் ரூபா 1,417,329 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) இரண்டாவது நிகழ்ச்சித்திட்டத்தின் மூலதனச் செலவினக் கூட்டுத் தொகை ரூபா 1,969,200 ஆகும். இது ரூபா 1,952,325 ஆகக் கணக்கிலிடப்பட்டதால் மூலதனச் செலவினம் ரூபா 16,875 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஒ) 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் நீதிமன்றத் தண்டப்பண வருவாய் பட்டியலிடப்படுகையில் முறையே ரூபா 80,917 மற்றும் ரூபா 2,448,800 எனக் குறைவாகப் பட்டியலிடப்பட்டிருந்தன. இவற்றிற்கு மீளாய்வாண்டின்போது சீராக்கல் செய்யப்படாமையால் கடன்பட்டோர் மீதியும் திரட்டு நிதிய மீதியும் ரூபா 2,529,717 குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

(ஓ) முன்னைய ஆண்டிற்கான கடை வாடகை வருவாயில் தீவிபத்துக்குள்ளான 10 கடைகளது வாடகை நிலுவையான ரூபா 30,000 பதிவழிக்கப்பட்டு ஆண்டிற்கான செலவினமாகக் காட்டப்பட்டதால் அதேயளவு தொகையால் மிகையானது குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஔ) 2011,2012, 2013 ஆம் ஆண்டுகளுக்கான முத்திரைக் கட்டணமாகப் பட்டியலிடப்பட்ட ரூபா 5,800,000 கூட்டுத் தொகையின் பொருட்டு மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் பெறப்பட்ட வருவாய் ரூபா 17,425,270 ஆகும். குறைவாகப் பட்டியலிடப்பட்ட தொகையான ரூபா 11,625,270 சீராக்கல் செய்யப்படவில்லை.

(க) மீளாய்வாண்டில் 02 நிலையான வைப்புகளது பெற வேண்டிய வட்டி ரூபா 94,355 ஆகும். இது ரூபா 70,661 ஆகக் காட்டப்பட்டதால் வட்டி வருவாயும் கடன்பட்டோர் மீதியும் ரூபா 23,694 குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

(ங) 2014 ஆம் ஆண்டிற்கான பொருட் கணிப்புச் சபையின் சிபார்சுக்கமைய மீளாய்வாண்டின்போது ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட நிலையான சொத்துக்களது விற்பனை வருவாயான ரூபா 11,410 மூலதன வருவாயின் கீழ் காட்டப்படவில்லை.

(ச) மீளாய்வாய்டினது நிர்மாண வேலைகளுக்குப் பெறப்பட்ட மாகாண சபை உதவியாகிய ரூபா 12,340,580 மற்றும் வேலைகளுக்குச் செலவிடப்பட்ட ரூபா 11,146,010 என்பன மூலதன உதவி மற்றும் மூலதனச் செலவினத்தின் கீழ் கணக்கிலிடப்படவில்லை.

(ஞ) பிரதேச சபை நிதியிலிருந்து 21 வேலைகளுக்குச் செலவிடப்பட்ட ரூபா 3,095,672 மூலதனச் செலவினத்தின் கீழ் கணக்கிலிடப்படவில்லை.

(ட) பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் உணவு மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்வதற்காக 2014 ஆம் ஆண்டில் பெறப்பட்டுத் தீர்த்து வைக்கப்படாதிருந்த ரூபா 15,000 முற்பணமானது முற்கொடுப்பனவாகக் காட்டப்பட்டிருக்கையில் கடன்கொடுத்தோரின் கீழும் தவறுதலாகக் காட்டப்பட்டிருந்தது.

(ண) சபைக்குரிய 05 ஏக்கர், 02 றூட், 35 பர்ச்சஸ் காணியினது 07 காணித் துண்டுகளது பெறுமதி கணிப்பிடப்பட்டுக் கணக்கிலிடப்படாததால் நிலையான சொத்துக்களது பெறுமதி குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(த) பொருட் கணிப்பு அறிக்கையின் பிரகாரம், 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மின்சாரக் களஞ்சியத்தில் இருந்த எஞ்சிய கையிருப்பு மீதியாகிய ரூபா 780,218 சொத்துக்களின் கீழ் காட்டப்படாமையால் அதேயளவு தொகையால் நடைமுறைச் சொத்துக்கள் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ந) முதலாவது நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பெற வேண்டிய சம்பள மீளளிப்பு வருவாய் ரூபா 1,012,950 ஆகும். இது வருவாய்க் கடன்பட்டோர் கணக்கிலும் சம்பள மீளளிப்பு வருவாய்க் கணக்கிலும் பிழையின்றிக் காட்டப்பட்டிருக்கையில் 09 ஆம் இலக்க நாட் குறிப்பின் மூலம் வருவாய்க் கணக்கிலும் கடன்பட்டோர் கணக்கிலும் ரூபா 892,950 சீராக்கல் செய்யப்பட்டதாகத் தவறான குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ப) ஐந்தொகையில் மொத்தச் சொத்துக்களது கூட்டுத் தொகை ரூபா 163,741,519 ஆகவும் மொத்தப் பொறுப்புகளது கூட்டுத் தொகை ரூபா 164,923,475 ஆகவும் காட்டப்பட்டதால் இணக்கமின்றியிருந்த தொகை ரூபா 1,181,956 ஆகும்.

(ம) தகர்த்து அகற்றப்பட்டிருந்த ரூபா 452,800 பெறுமதியான 10 கட்டிடங்கள் காணி மற்றும் கட்டிடக் கணக்கில் காட்டப்பட்டதால் நிலையான சொத்துக்களது பெறுமதி அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

(அ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 04 கணக்கீட்டு விடயங்களது மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 68,265,752 ஆகும். அவற்றோடு தொடர்புடைய உப பதிவேடுகள் / அறிக்கையின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 44,893,073 ஆகும். வித்தியாசம் ரூபா 23,372,679 ஆகும்.

(ஆ) 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பொருட் கணிப்பு அறிக்கையின் பிரகாரம் மின்சாரக் களஞ்சியக் கையிருப்பு மீதி ரூபா 780,218 ஆகும். கையிருப்புப் பதிவேட்டின் பிரகாரம் மீதி ரூபா 292,218 ஆகும். இணக்கமுறாத பெறுமதி ரூபா 488,000 ஆகும்.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

(அ) 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளது பெறுமதி ரூபா 36,509,095 ஆகும். அதில் ரூபா 17,306,332 ஓராண்டிற்கு மேற்பட்டதாகும்.

(ஆ) 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகளது பெறுமதி ரூபா 11,280,434 ஆகும். அதில் ரூபா 1,687,329 ஓராண்டிற்கு மேற்பட்டதாகும்.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றின்மை

(அ) 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கையில் உள்ள களஞ்சியப் பொருட் கையிருப்பு ரூபா 576,085 ஆகக் கணக்கில் காட்டப்பட்டிருந்தபோதும், கையிருப்புப் பதிவேடு கணக்கிணக்கஞ் செய்யப்பட்டு பொருட் கணிப்புக்கு உட்படுத்தப்படாமையால் கையிருப்பு மீதியைக் கணக்காய்வில் உறுதி செய்ய முடியாதிருந்தது.

(ஆ) உள்ளூராட்சி ஆணையாளரது சீஎல்ஜீ/6/5/4 ஆம் இலக்கக் கடிதத்தின் பிரகாரம் நாட் சம்பளத்திற்கு ஆட்சேர்க்கப்பட்ட தொழிலாளி ஒருவருக்கு 2015 மேயிலும் யூனிலும் முறையே 23 மற்றும் 15 நாட்கள் சபையில் பணி புரிந்ததாகவோ அல்லது சபைக்கு வருகை தந்ததாகவோ எதுவித சான்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாது ரூபா 34,200 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 2,116,635 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 2,300,600 ஆகும் இதனால் மீளாய்வாண்டின் நிதிப்பெறுபேறுகளில் ரூபா 183,965 நலிவு தென்பட்டது.

### 2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

நிதிப் பெறுபேறுகளின் ரூபா 183,965 நலிவுக்கு 05 செலவின விடயங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு பிரதான காரணமாக அமைந்தது.

## 2.3 வருவாய் நிர்வாகம்

### 2.3.1 வருவாய்ச் சேகரிப்பிலான செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

செயலாளரால் மிளாய்வாண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலிடப்பட்ட வருவாய், உள்ளவாறான வருவாய் மற்றும் வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

**2015.12.31 இல் உள்ளவாறான நிலுவை**

| | வருவாயினது தோற்றுவாய் | 2015 சனவரி 01 இல் உள்ளவாறான நிலுவை | 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவையில் அறவீடு | 2015 ஆம் ஆண்டிற்கான பட்டியல் தொகை | ஆண்டிற்கான பட்டியலில் அறவீடு | 2015 சனவரி 01 இல் உள்ளவாறான நிலுவை மீதி | ஆண்டிற்கான பட்டியலிடப்பட்ட தொகையில் நிலுவை | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | தீர்வையும் வரியும் | 1,764,920 | 708,250 | 4,312,270 | 3,201,022 | 1,056,670 | 1,111,248 | 2,167,918 |
| (ii) | குத்தகை வாடகை | 540,118 | 68,000 | 3,610,663 | 3,514,593 | 472,118 | 96,070 | 568,188 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | - | - | 705,100 | 849,358 | - | 144,258 | 144,258 |
| (iv) | பிடிஆணைக் கட்டணமும் தண்டப் பணமும் | 15,819,869 | 6,385,925 | 4,494,375 | 245,630 | 9,433,944 | 4,248,745 | 13,682,689 |
| (v) | ஏனைய வருவாய் | 22,712,478 | 14,046,522 | 6,344,995 | 1,044,995 | 8,665,956 | 5,300,000 | 13,965,956 |

### 2.3.2 அனுமதிப் பத்திரக் கட்டணம்

(அ) வருடாந்தக் கணிப்பை மேற்கொண்டு அதன் மூலம் வியாபார நிறுவனங்களை இனங்கண்டு வர்த்தக அனுமதிப் பத்திரக் கட்டணம் மற்றும் வியாபார வரி வருவாயை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் முறையே ரூபா 712,450 மற்றும் ரூபா 575,026 எனக் குறைந்த மட்ட வருவாய் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) கித்துல்கல மஹாகே பிரதேசத்தில் நடைபெறும் நீரைப் போத்தலில் அடைத்து விற்பனை செய்யும் வியாபாரத்திற்கு அனமதிப்பத்திரக் கட்டணம் அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படாததுடன், கட்டிட நிர்மாணத்திற்கான சபையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

(இ) யட்டியாந்தோட்டை பிரதேசத்தில் செயற்படுத்தப்படும் சிறிய அளவிலான நீர் மின்சக்தி நிலையத்தின் அளவை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், அதன் மூலம் வருவாய் எதனையும் பெற்றிருக்கவுமில்லை. கட்டிட நிர்மாணத்திற்கான சபையின் அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 ஏனைய வருவாய்

(அ) களணி கங்கைச் சுற்று வட்டாரத்தில் நடைபெறும் 21 சவால்களைச் சந்திக்கும் படகுச் சவாரி வியாபார நிறுவனங்கள் மூலம் சபை எதுவித வருவாயையும் பெறவில்லை. வருவாயை அறவிடுவதற்கான விதி முறைகள் தயாரிக்கப்படவுமில்லை.

(ஆ) இலங்கை குடியரசின் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் தொலைபேசிக் கோபுரங்களை நிர்மாணிப்பதற்கான உயரம் 5-20 மீட்டராகும். ரூபா 20,000 மற்றும் அதிகரிக்கும் ஒவ்வொரு மீட்டருக்கும் ரூபா 100 வீதம் செய்முறைக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். எனினும், சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த தொலைபேசிக் கோபுரங்களிலிருந்து பணம் எதுவும் அறவிடப்படவில்லை.

(இ) சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் பொருத்தப்பட்டிருந்த 06 விளம்பரப் பலகைகளினது சதுர அடி அளவு கணிப்பிடப்பட்டு அதற்கேற்பக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஈ) 2014 ஆம் ஆண்டு முதல் 2015 நவெம்பர் வரையிலான காலப்பகுதியின் போது யட்டியாந்தோட்டை பொதுக் கழிவறையின் நீர்க்கட்டணமாகிய ரூபா 135,055 சபையால் செலுத்தப்பட்டிருந்ததுடன், கழிவறைக்கான விலைக்கோரல் மனுவின் மூலம் சபைக்கு வருவாயை ஈட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2015 டிசெம்பர் 15 ஆந் திகதிய நேரடிப் பரிசோதனையின்போது தனி நபர்களால் கழிவறைப் பாவனையாளர்களிடமிருந்து அதிகாரமின்றிப் பணம் அறவிடப்படுவது அவதானிக்கப்பட்டதுடன், சபை இதன் காரணமாக ரூபா 576,000 இழப்பிற்குள்ளாகியிருந்ததும் அவதானிக்கப்பட்டது.

(உ) யட்டியாந்தோட்டை நகரில் 7.5 பர்ச்சஸ் காணியில் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றை நடாத்துவதற்கு 1981 முதல் வருடாந்தக் குத்தகைக்கு அது வழங்கப்பட்டிருந்தபோதும், 2011 ஒக்டோபர் 14 ஆந் திகதியின் பின்னர் குத்தகை உடன்படிக்கையைப் புதுப்பிப்பதற்கு அல்லது மதிப்பீட்டை மீளாய்வு செய்து கட்டணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.3.4 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய தொகை பின்வருமாறு.

| | | ரூபா |
|---|---|---|
| | | ------------- |
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 13,682,689 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 13,965,956 |

### 2.3.5 குத்தகை வாடகை

2009 மார்ச் 09 ஆந் திகதிய சபரகமுவ உள்ளூராட்சி ஆணையாளரின் 2009/01 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 2.5 ஆம் பந்தியின் பிரகாரம் 05 ஆண்டுகளுக்கு ஒருமுறையேனும் குத்தகை வாடகை பிரதான விலை மதிப்பீட்டாளரால் மதிப்பீடு செய்யப்பட்டு வாடகை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எனினும், பொதுச் சந்தையில் உள்ள கடைகளிலிருந்து 2009 ஆம் ஆண்டினது மதிப்பீட்டின்படியே வாடகை அறவிடப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

(அ) 2010 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட 06 தொழிலாளர் மனைகளுக்கு நன்கொடையாகப் பெறப்பட்ட தளபாடங்களும் உபகரணங்களும் தொடர்பாகப் பொருட் பதிவேடு ஒன்று பேணப்படவில்லை.

(ஆ) 2015 சனவரி மாதத்தில் ரூபா 410,201 செலவழித்து நிர்மாணிக்கப்பட்ட 240 சதுர அடிக் கடை ஒன்று 2015 டிசெம்பர் 31 வரை பயனற்றிருந்ததால் சபை பெறக்கூடியதாக இருந்த ரூபா 69,000 வருவாயை இழந்திருந்தது.

(இ) சகல கட்டிடத் திட்டங்களும் விண்ணப்பப் பத்திரத் திட்டக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டுமாயினும், நகருக்கு வெளியே உள்ள 50 திட்டங்கள் தலைவரின் தற்றுணிப்புக்கேற்ப அங்கீகரிக்கப்பட்டிருந்தன.

(ஈ) வியாபார நிறுவனங்களும் வங்கிக் கடனில் நிர்மாணிக்கப்படும் வீடுகளுக்குமான கட்டிட விண்ணப்பத்திரங்கள் அங்கீகரிக்கப்படுவதில் 2 முதல் 6 மாத காலம் வரை கடந்திருந்தமையால் பொது மக்களது சேவைகளை சபை வினைத்திறனுடன் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் 2013 ஆம் ஆண்டில் 3 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த இடத்திற்கு இடம் கொண்டு செல்லப்படக் கூடிய 10 பல்வேறு பணிகளுக்கான கூடுகள் சபையின் பொருட்பட்டோலையில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 2015 டிசெம்பர் 15 ஆந் திகதிய கணக்காய்வுத் தினத்தன்றும் 4 கூடுகள் குறைவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) பன்முகப்படுத்தப்பட்ட வரவு, செலவுத் திட்ட நிதியேற்பாட்டின் பிரகாரம் 2013 டிசெம்பர் 13 அன்று வழங்கப்பட்ட ரூபா 49,600 மூலம் 62 நீர்க் குழாய்கள் கொள்வனவு செய்யப்பட்டுக் களஞ்சியத்தில் பொறுப்பேற்கப்பட்டபோதும், கையிருப்புப் பதிவேட்டில் பதிவு செய்யப்படாதிருந்தன. நீர்ச் செயற்திட்டத்தை அமுலாக்குவதற்கு முறையாகத் திட்டமிடாததால் செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்ய முடியவில்லை.

(எ) 2014 பிரதேச சபைகளை வலுவடையச் செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பெறப்பட்ட தொகை ரூபா 4,000,000 ஆகும். இதில் ரூபா 1,391,740 செயற்திட்ட

அமுலாக்கலுக்குப் பயன்படுத்தப்படாது முகவர் நிலையத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தது.

(ஏ) 2015 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 287,700 பெறுமதியான 09 கூறுகளை உடைய உபகரணங்கள் மற்றும் பொருட்கள் என்பன கையிருப்புப் பதிவேடுகளிலோ அல்லது பொருட் பட்டோலையிலோ பதிவு செய்யப்படவில்லை.

(ஐ) 2000 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை நீர் வழங்கலுக்காக நீர்ப்பாவனையாளர்களால் வைப்பிலிடப்பட்ட ரூபா 312,811 வைப்புப் பணம் நீர் வழங்கலுக்காகச் செலவிடப்பட்டிருந்தது. எனினும், கணக்கு மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் அத் தொகை கணக்குகளில் நீர்வழங்கல் கடன் கொடுத்தோராகக் காட்டப்பட்டிருந்தது.

(ஒ) சபைக்குரிய வாகனங்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு கராஜ் ஒன்று நிர்மாணிக்கப்படாததுடன், மயான வளவிலும் சபைக்கு எதிரே உள்ள இடத்திலும் திறந்த வெளியில் அவை தரித்து வைக்கப்பட்டிருந்தன.

(ஓ) 2015 டிசெம்பர் 15 ஆந் திகதியன்று களஞ்சியப் பொருட்கள் நேரடிப் பரிசோதனைக்குள்ளானபோது ரூபா 125,949 பெறுமதியான 19 களஞ்சியப் பொருட்கள் குறைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

கார்பனிக் உரக் கூறில் உரத்தைப் பரவி வைக்கும் நடவடிக்கைகள் மற்றும் நிலத்தை கொங்கிரீட் இடுவதற்கு 2015 ஏப்ரல் 11 முதல் 2015 ஏப்ரல் 30 வரை 05 தொழிலாளர்கள் 49 மனித நாட்கள் பணியாற்றியதாகக் குறிப்பிடப்பட்டு ரூபா 49,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், வரவு இடாப்பில் இதன் பொருட்டு கையெழுத்திடப்பட்டிருக்கவில்லை. கொடுப்பனவு உறுதிச் சான்றில் வரவு இடாப்புடன் இணக்கஞ் செய்யப்பட்டது அல்லது கொடுப்பனவு பிழையற்றது எனும் உத்தியோகத்தர் ஒருவரின் கையெழுத்து இருக்காததுடன், தலைவரால் கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட்டுக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**3.3 சுற்றாடல் சச்சரவுகள்**

சபையின் அதிகாரத்துக்குட்ட பிரதேசத்தில் காணி மற்றும் அதன் சுற்றாடலில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடங்களுக்குரிய திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிராததுடன், 25 சவால்களை எதிர்நோக்கும் படகுச் சவாரி நிலையங்களுக்குச் சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவு மில்லை.

**3.4 ஒப்பந்த நிர்வாகம்**

மாகாண சபையின் 03 வேலைகளுக்கு சபையின் நிதியிலிருந்து ரூபா 827,848 முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. எனினும், அதற்கான அங்கீகாரத்தைப் பெற நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**4. கணக்களிப் பொறுப்புப் நல்லாளுகையும்**

**4.1 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட வரவு, செலவுத் திட்டத்தில் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்த 09 செலவின விடயங்களில் ரூபா 291,000 கூட்டுத் தொகையுடைய 100 சதவீதமும் 04 செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 4,270,000 நிதியேற்பாட்டுக் கூட்டுத் தொகையில் 83 முதல் 98 சதவீதமும் எதிர்பார்த்த நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படவில்லை.

**4.2 சொத்து முகாமைத்துவம்**

**4.2.1 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்**

(அ) 2015 மே மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 54,000 பெறுமதியான 03 மேளங்கள் பயன்படுத்தப்படாது 03 நூலகங்களில் வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) பெறுமதி ரூபா 59,990 உடையதும் ரூபா 4,950 பெறுமதியுடையதுமான 02 தண்ணீர் மோட்டார்கள் மற்றும் ரூபா 240,000 பெறுமதியான தண்ணீர்ப் பம்பு என்பன 10 ஆண்டுகளுக்கும் மேலாக பயன்படுத்தப்படாதிருந்தன.

**4.3 பதில் வழங்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்**

மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்ட 04 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(i) கணக்கீடு

(ii) வருவாய் நிர்வாகம்

(iii) சொத்து முகாமைத்துவம்

(iv) கடன்பட்டோர் கட்டுப்பாடு